**<u>சுருக்கம்</u>**

திட்டம் மற்றும் வளர்ச்சி – இராமநாதபுரம் மாவட்டம் – திருவாடனை அரசு மருத்துவமனையில் ரூ.79.10 இலட்சம் செலவில் பிரேத பரிசோதனை கூடம் அமைக்க நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது,

---

**<u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எப்–1) துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.37**

**நாள்: 04.02.2020**
விகாரி, தை–21
திருவள்ளுவர் ஆண்டு,

படிக்க:

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் அவர்களின் கடித எண். 46327/திவ1/2/2019, நாள் 29.08.2019 மற்றும் 15.11.2019.

******

**<u>ஆணை:</u>**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் 2019–20–ம் ஆண்டின் மானியக் கூட்ட தொடரின் போது கீழ் காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

"இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனை கூடம் ரூ.80.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்."

2. பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை அரசு மருத்துவமனை 62 படுக்கை வசதிகளுடன் கூடிய புறநோயாளிகள் பிரிவு, மகப்பேறு பிரிவு, மகப்பேறு முன் / பின் கவனிப்பு பிரிவு, குழந்தைகள் நலப் பிரிவு, அவசர மற்றும் விபத்து சிகிச்சை பிரிவு, நுண்கதிர் பிரிவு, அறுவை அரங்கு சித்தாபிரிவு, உள்நோயாளிகள் பிரிவு ஆகிய கட்டிடங்கள் செயல்பட்டு வருகிறது என்றும், இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனையில் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள் வசித்து வருகின்றனர் என்றும், திருவாடனை அரசு மருத்துவமனை மாநில நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது என்றும், எனவே இப்பகுதியில் விபத்து ஏற்பட்டு காயமடைந்தவர்கள் இறக்கும்பட்சத்தில் அவர்களுடைய சடலத்தை குளிரூட்டப்பட்ட அறையில் வைத்து பாதுகாக்கப்பட வேண்டியுள்ளதால் இம்மருத்துவமனையில் குளிரூட்டப்பட்ட பிணவறை வசதி ஏற்படுத்துவது மிகவும் அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

3. எனவே, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கூடம் கட்டுவதற்கு ரூ.80.00 இலட்சம் வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கூடம் அமைக்க ரூ.79.10 இலட்சம்(ரூபாய் எழுபத்தொன்பது இலட்சத்து பத்தாயிரம்) மட்டும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

"4210 மருத்துவமும் பொது சுகாதாரமும் குறித்த மூலதனச் செலவு – 01 நகர்ப் பகுதி சுகாதாரப்பணிகள் – 110 மருத்துவமனைகளும் மருந்தகங்களும் (மருந்தாக்கியல் துறை உட்பட) – மாநிலச் செலவினங்கள் – JA கட்டடங்கள் – 416 பெரும்பணிகள் – 01 பெரும்பணிகள்" (மானியம் 39.02)"

(த.தொ.கு.4210–01–110 JA–1602)

IFHRMS 4210 01 110 JA 41601

6. மேலே பத்தி நான்கில் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்கிட, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் / தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. இவ்வாணை நிதி துறை அ.சா.கு. எண். 2791 / சுகாதாரம்–II / 2020, நாள் 30.01.2020–ன் படி வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பீலா ராஜேஷ்**
**அரசு செயலாளர்.**

<u>பெறுநர்</u>
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–6.
வழியாக இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்,
இராமநாதபுரம் மாவட்டம்.
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), இராமநாதபுரம் மாவட்டம்.
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை–5.
மாநிலத் தலைமைக் கணக்காயர், சென்னை–18.
மாநிலத் தலைமைக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.

**<u>நகல்:</u>**
நிதி (சுகாதாரம் – II/வ.செ. பொ–II/ பொ.ப.I)த் துறை, சென்னை–9.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு துணை முதலமைச்சர்அமைச்சர்
(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை), சென்னை–9.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை), சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை–9.
உதிரி நகல் / இருப்புக் கோப்பு.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

5.2.2020

**பிரிவு அலுவலர்.**

5.2.2020 10/12